REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 8உ திங்கள் (23—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 9உ செவ்வாய் (24—12—57) [இதழ் 164

இந்தி மொழி பிறந்த வரலாறு!

மொகலாய சக்கரவர்த்திகள் காலத்தில்தான் இந்தி மொழி உருவாக்கப்பட்டது.

அந்தச் சக்கரவர்த்திகள், ஆக்ரா, டெல்லி, பஞ்சாப், முசாபர்பூர் டாக்கா முதலிய இடங்களில் பல இராணுவ முகாம்களை அமைத்தனர்; அந்த முகாம்களில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்கள் வசித்துவந்தனர்; அவர்கள் தங்களின் உபயோகத்துக்காக அராபி, பாரசீகம், சமஸ்கிருதம், மற்றும் பிரதேச மொழி இவற்றைக் கொண்டு ஒரு மொழியை உருவாக்கினர்; அந்த மொழி தான் இப்போதைய இந்தி! என்று, டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், ஆட்சி மொழி மாநாட்டில் தலைமையுரையாற்றுகையில் கூறியிருக்கிறார்.

'இந்தியை ஒருபோதும் ஏற்கமாட்டோம்'

'ஆங்கிலமே என்றென்றைக்கும் நீடிக்க வேண்டும்'

தென்னக நல்லறிவாளர் போர்முழக்கம்

ஆட்சிமொழி மாநாட்டில் இந்தியை எதிர்த்துத் தீர்மானம்

சி. பி., சி., ஆர்., பி. டி. இராசன் முதலியோர் கொண்ட செயற்குழு அமைப்பு

சென்னை, டிச. 23—

"என்றைன்றைக்குமே ஆங்கிலம் நீடிக்க வேண்டும்; ஒருபோதும் இந்தி கூடவே கூடாது" என்ற கருத்தினை வலியுறுத்தி, டெல்லியின் இந்தித் திணிப்பிற்கு எதிராக தென்னகத்து அறிஞர் பலரும் போர் முழக்கம் செய்திருக்கின்றனர்.

நேற்று காலை மயிலை சாஸ்திரி மண்டபத்தில் நடைபெற்ற ஆட்சி மொழி மாநாட்டிலும், அதையொட்டி, மாலை, கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்திலும் 'இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி திணிக்கப்படக் கூடாது; இப்போதுபோல, ஆங்கிலமே தொடர்ந்து நீடித்தாக வேண்டும்; இதற்காக, தேவையான அரசியல் சட்ட மாறுதல்களையும் செய்தாக வேண்டும்' என்று அவர்கள் திட்டவட்டமாகக் கருத்தறிவித்திருக்கின்றனர்.

காலையில் சாஸ்திரி மண்டபத்தில் நடைபெற்ற தென்னிந்திய ஆட்சிமொழி மாநாட்டில், 'இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆங்கிலமே நீடிக்கவேண்டும்' என்று வற்புறுத்தி, விளக்கமானதோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

மாநாட்டின் தீர்மானத்தை டெல்லி சர்க்கார் ஏற்கச் செய்வதற்காக டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், சி. இராசகோபாலாச்சாரி, டாக்டர் எம். இரத்தினசாமி, பி. கோதண்டராவ், பி. டி. இராசன், ஏ. சுப்பையா, எஸ். செல்லசாமி ஆகிய எழுவர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

டாக்டர் எம். இரத்தினசாமி அவர்களை வரவேற்புக் குழுத் தலைவராகக் கொண்ட அந்த மாநாட்டிற்கு டாக்டர் சி. பி இராமசாமி ஐயர் அவர்கள் தலைமை தாங்கினர்.

மீர்ஜா இஸ்மாயில், அவர்கள், மாநாட்டினைத் துவக்கிவைத்தார்.

தலைமையுரைக்குப் பிறகு திருவாளர்கள், சி. இராசகோபாலாச்சாரி, பி. டி. இராசன், பி. கோதண்டராவ் ஆகியோர் பேசினர்.

ஆச்சாரியார் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை எஸ். ஆர். வெங்கட்ராமன் வழிமொழிந்தார்.

செயற்குழு அமைப்பு பற்றிய தீர்மானத்தை எஸ். செல்லசாமி முன்மொழிந்தார்; ஆர். வி. கிருஷ்ண ஐயர், வழிமொழிந்தார்.

திரு. நாராயணசாமி நன்றி கூற, மாநாடு, தீர்மானங்களை ஒரு மனதாக நிறைவேற்றியபின் இனிது முடிவுற்றது.

பெரியார் சிறை மாற்றம்

சென்னை, டிச. 21—

சாதி ஒழிப்புப்போராட்டத்தில் 6 மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள், திருச்சி மத்திய சிறையிலிருந்து சென்னை சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கோலார் தங்கவயலுக்கு நஷ்டஈடு!

ரூ. 164 இலட்சம் அளிப்பதற்குச் சிபாரிசு

புதுடில்லி, டிச. 21—

கோலார் தங்கவயலை அரசாங்கம் தேசிய மயமாக்கியது தெரிந்ததே.

"இதை அரசாங்கம் ஏற்பதற்கு முன் இயங்கிவந்த 3 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 164 இலட்சம் நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் நியமித்த குழு சிபாரிசு செய்துள்ளது" என்று மக்கள் சபையில், மத்திய சுரங்க அமைச்சர் மாளவியா தெரிவித்துள்ளார்.

பிரச்சினை ஆட்சி மொழிபற்றியதே!

தேசீய மொழிபற்றியது அல்ல!

டாக்டர் எம். இரத்தினசாமி தெளிவுரை

சென்னை, டிச. 22—

"இப்போதுள்ள பிரச்சினை எல்லாம், ஆட்சிமொழியைப் பற்றியது—தேசீயமொழியைப் பற்றி அல்ல. பிரச்சினையை இந்தக் கண்ணோட்டத்திலிருந்து அணுகினால், உணர்ச்சி எழுச்சிகளுக்கு இடமே இருக்கமுடியாது.

"உபயோகத்திற்காக என்ற நோக்கத்திலிருந்து நிர்வாக அரசியல் காரியங்களுக்குப் பயன்படும் கருவி என்றவகையில், இந்த மொழிப் பிரச்சினையை ஆராயவேண்டும். ஆட்சிமொழியாக ஆங்கிலத்தை உபயோகித்து வருவது, நிர்வாக சௌகரியத்தைத் தருகிறதா, இல்லையா? நிர்வாகக் கருவி என்ற முறையில், ஆங்கிலத்திற்குப் பதில் வேறொரு இந்திய மொழியைக் கொண்டுவருவது, ஆங்கிலத்தை விடப் பயனுள்ளதாயிருக்குமா? —என்பதுதான் ஆராயப்பட வேண்டிய உண்மையான பிரச்சினையாகும்.

"ஆட்சிமொழிக் குழு, ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைக் கொண்டுவருவதற்காகக் காட்டியுள்ள காரணங்களுள் ஒன்று, இப்போது நிர்வாகம், மக்களில் 90 சதவிகிதத்தினருக்குப் புரியாத ஒரு மொழியில் நடைபெறுகிறது என்பதாகும். இதற்கு, திரும்ப ஒரு கேள்வியையே பதிலாகத் தரலாம்; மக்களில் 80 சத விகிதத்தினருக்கு மேல் கல்வியறிவு அற்றவர்கள். இந்த மக்களைக் கொண்டு ஒரு நாட்டின் நிர்வாகம் நடைபெறலாமா என்று கேட்கலாம்; இந்தி பேசுகிற மக்களில் 20 சத விகிதத்தினர் மட்டும்தானே கல்வியறிவு பெற்றவர்கள்?

"மேலைநாடுகளில் 18-ம் நூற்றுண்டின் இடைக்காலம் வரையில், அரசாங்கக் காரியங்களுக்கு லத்தீனும், இராஜதந்திர விவகாரங்களுக்கு பிரஞ்சு மொழியும் உபயோகிக்கப்பட்டுவந்தன; இவை, தங்களுக்கு அன்னிய மொழிகள் என்பதைக்காட்டி தங்களுக்குப் பயன்படுவதை, அம்மக்கள் நிராகரித்து விடவில்லை.

"பின் ஆங்கிலத்தை மட்டும் அன்னிய மொழி என்று கூறி நாம் ஏன் நிராகரிக்க வேண்டும்?"

என்று, மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் டாக்டர் எம். இரத்தினசாமி அவர்கள் முழக்கமிட்டார்கள்.

முதலில் அரசியல் சட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்

பிறகு இந்தியை ஆட்சி மொழியாக்குவதுபற்றிப் பேசலாம்

ஆட்சிமொழி மாநாட்டில் டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் தலைமையுரை

"அரசியல் சட்டத்தின் 351-வது பிரிவு கூறுவது என்ன?

"'...இந்தியாவில் கூட்டுக் கலாச்சாரத்தின் பல அம்சங்களையும் வெளிப்படுத்தும் கருவியாகப் பயன்படும் வகையில், இந்தி மொழியை வளர்க்கவேண்டும்—பரப்பவேண்டும்; இது மத்திய சர்க்காரின் கடமையாகும்' என்று அந்த விதி கூறுகிறது.

"இந்த விதிப்படி, இந்திமொழி

(4-ம் பக்கம் பார்க்க)

பலருக்கு அன்னிய மொழியான இந்தி எப்படி இந்தியாவின் தேசீய மொழியாகும்?

என்றும் இந்தி தேசீய மொழியாக முடியாது

பிரச்சினை, ஆட்சி மொழிபற்றியதாகும்

மீர்ஜா இஸ்மாயில் கருத்துரை

"யூனியன் ஆட்சி மொழியாக, ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி திணிக்கப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்—கடுமையாக எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவிக்கவே நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

"நாட்டில் ஒற்றுமை உணர்வை, ஐக்கிய மனோபாவத்தை வளர்க்க வேண்டும் என்ற ஆசைதான் இந்த இந்தித் திணிப்புத் திட்டத்தின் நோக்கம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். உண்மையிலேயே ஒரு தேசிய மொழியைப் பெற்றிருப்பது, அந்த ஒற்றுமை மனப்பான்மை வளர்க்கும் என்பதில் சந்தேகமில்லை ஆனல் ஒரு மொழி, இயற்கையான அங்கீகாரம் பெற்று, காலக்கிரமத்தில் படிப்படியாக அத்தகைய ஒரு தேசிய மொழியாக வளர்ந்துள்ள உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட மொழிதான்—தேசிய மொழிதான், ஒற்றுமை உணர்வை வளர்க்க முடியும்.

"ஆனல், இந்தி அப்படிப்பட்ட ஒரு மொழி அல்ல; அப்படி ஒரு தேசிய மொழியாக அது எப்பொழுதாவது வளரும் என்று நான் கருதவில்லை. அது ஒரு பிரிவினரின் மொழி. அது இதர இடங்களில் வளர வேண்டும் என்பது போற்றுதற்குரிய இலட்சியமாகக்கூட இருக்கலாம்; ஆனல், செயற்கையானது.

"பலருக்கு நிச்சயமாக அன்னிய மொழியாயிருக்கும் ஒன்றினை நம்மீது வலுக்கட்டாயமாகத் திணிப்பதினால், நம்மிடம் ஒரு போதும் ஒற்றுமை உணர்வு ஏற்படவே முடியாது.

"ஆங்கிலம் எப்படி இங்கு ஒரு தேசிய மொழியாக இல்லையோ, அப்படித்தான் இந்தியும் தேசிய மொழியாக இல்லை. நாம் ஒன்றும் ஆங்கிலத்தை தேசிய மொழி என்றுகூறவில்லை; ஆட்சி விவகாரங்களுக்கு அது இருக்கட்டும் என்றுதான் கூறுகிறோம்"

என்று, மாநாட்டினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் மீர்ஜா இஸ்மாயில் அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை, டிச. 21—

1957 டிசம்பர் திங்கள் 7-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினரின் வாழ்க்கைச்செலவுப் புள்ளி 394 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கைத்தறித் துணி விற்பனைக் கழிவு

விழாக்காலங்களில் உயர்த்தப்படும்

மத்திய மந்திரி கிருஷ்ணமாச்சாரி வாக்குறுதி

அமைச்சருடன் ஏ. கோவிந்தசாமி பேட்டி

பம்பாய், டிச. 22—

நமது கழக சட்டமன்ற உறுப்பினரான தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவினர் (Estimate Committee) சிலருடன் டில்லி சென்று, மத்திய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களைப் பேட்டி கண்டு, தமிழ் நாட்டில் கைத்தறித் துணிகளுக்கு, மத்திய சர்க்கார் வழங்கிவந்த விற்பனைக் கழிவுத் தொகை(Rebate)யைக் குறைத்ததன் காரணமாக, கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—12—57 திங்கள்

வெறும் கண்துடைப்பு!

டெல்லி சர்க்கார் ஊழியர்களில் மாதம் ரூ. 250-க்குக் குறைவாகச் சம்பளம் பெறுவோருக்கு 'கிராக்கிப் படி'யில் ரூ. 5 உயர்வு தரவேண்டும் என்று, இரண்டாவது ஊதிய நிர்ணயக் குழு, 'இடைக்கால நிவாரணம்' என்ற பெயரில் சிபாரிசு செய்துள்ளது.

'இதனை நாங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டோம்' என்ற தங்களின் முடிவை அடைமொழி வாக்கியமாக்கியே, சிபாரிசினை வெளியிட்டிருக்கிறது, டெல்லி!

இரண்டாவது சம்பள நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டதிலிருந்தே, அதன் விசாரணை வரம்புக்குள் தங்களது கோரிக்கைகளையும் ஆட்படுத்தவேண்டும் என்று மாநில சர்க்கார் ஊழியர்கள்—குறிப்பாக, தென்னாட்டின் நான்கு மாநில சர்க்கார் ஊழியர்கள். வற்புறுத்தி எடுத்துரைத்தும், டெல்லி, வழக்கமான தனது செவிட்டுக் காதையே திருப்பிக்காட்டிவிட்டது. தந்தி கொடுத்துள்ளனர். தமிழ் நாட்டு 'என். ஜி. ஓ.' சங்கத்தினர்-பண்டிதருக்கும, பந்திறகும்! பலன் என்னவோ, புன்சிரிப்பில் அல்லது மௌனத்தில் புதைக்கப்பட்டிருக்கும் 'முடியாது' என்ற வழக்கமான பதிலாகவே இருக்கிறது.

'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்பர்! பெரிய குரலில் வாயை அகலத்திறந்து அழுதனர், டெல்லி சர்க்கார் ஊழியர்கள்—குறிப்பாக, தபால்-தந்தி ஊழியர்கள்! பால் குடிக்கின்றனர்!

'இந்த மாநில என். ஜி. ஓ.-க்களுககு அழத்தெரிந்தாலும், அழ முடியவில்லை' என்று ஒரு இதழ், கேலியாக எழுதியிருக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கப்போகிற இடைக்கால நிவாரணம் மிகக குறைவானதுதான் என்றாலும், மாநில சர்க்கார் ஊழியர்களின ஊதியத்திற்கும், மததிய சர்க்கார் ஊழியாகளின் ஊதியத்திறகும் உள்ள இடைவெளியை அது அதிகரிககிறது.

இந்த உண்மையைக் கவனப்படுத்துவதற்கேனும் -டெல்லிப் பெரியவர்களுக்குததான்- தமிழ் நாட்டு என. ஜி. ஓ.-க்களின் தந்தி பயன்பட்டால் நல்லது.

அழுத பிள்ளைக்கு டெல்லி கொடுக்கிற பால், உதடு நனையக் கூடப் போதவில்லை என்பதை அறிந்துகொள்ள, வெள்ளை முதுக்கூட இடையூறுயிருக்க முடியாது.

மத்திய சர்க்கார் ஊழியர்கள் இடைககால நிவாரணமாக எதிர்பார்த்த தொகை மாதம ஐந்து ரூபாய் உயர்வு அல்ல; சர்க்காரே தயாரித்து, ஊருக்கு விற்கும் விலைப் புள்ளிப் பட்டியலைக் காட்டித்தான், வெகு நியாயமான முறையில் தங்கள கோரிக்கைகளை எழுப்பியிருந்தனர்; சர்க்காரின் வாழ்க்கைத் தரப் புள்ளி விகிதப்படி, அவர்கள், கிராக்கிப்படியில் மாதம ரூ 35 உயர்வு வேண்டுமெனக் கேட்டனர்; ஆனல் குழு சிபாரிசு செய்திருப்பதோ, 5 ரூபாய். "இது பெரிய ஏமாற்றம்; கசப்பு மிகுந்த ஏமாற்றம்; 'நிவாரணம்' என்ற பெயர்கூட இதற்குத் தரப்பட முடியாத அளவுக்குத் தொகை மிகக் குறைவானதாகும்" என்று, மத்திய சர்க்கார் ஊழியர் சம்மேளனத் தலைவர் நாத்பாய் அவர்களும், தபால் ஊழியர் சங்கத் தலைவர் கோஷ் அவர்களும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

இந்த நிவாரணம், உண்மையிலேயே, கஷ்டம் தாளாமல் போராடத் துணிந்த ஊழியர்களுக்கு எந்த வகையாலும் திருப்தியளிக்கப் போவதில்லை.

மற்றுமொன்று; 'இந்த நிவாரணம், கடந்த ஜூலை முதல் கிடைக்கும்' என்று கூறிவிட்டு, அடுத்த வரியிலேயே, 'தேச நலன் கருதி, இந்தத் தொகை, தேசிய சேமிப்புப் பத்திரம் என்ற பெயரில் காகிதமாகத் தான் தரப்படும்' என்று குழு கூறியிருப்பதும், ஊழியர்களின் முகத்தில் மகிழ்ச்சி படர முடியாமல் தடுப்பதாகும்.

இன்னுமொன்று; தினக்கூலி இலாகாவிற்கு அப்பாற்பட்டவர்கள் முதலிய துறைகளைச் சேர்ந்த இரண்டு. இலட்சம் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இந்தச் சிறு தொகை நிவாரணம கூடக் கிடைக்கப்போவதில்லை; இதனல் அவர்கள் மன வருத்தமுறுவது இயற்கையே! மேலும், தங்களின் சக ஊழியர்களுக்கு, தங்களுக்குக் கிடைத்த அளவு சிறு நிவாரணம்கூடக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம், நிவாரணம் பெறுகிற ஊழியர்களின் அதிருப்தியை அதிகரிக்கவே செய்யும்.

மூன்று முறை வேலை நிறுத்தம் செய்ய ஆயத்தமான போதும், சர்க்கார் தந்த உறுதிமொழிகள் வேலைநிறுத்தத்தைத் தடுத்தன; நான்காவது முறை, கமிஷன் அமைப்பு — இடைககால நிவாரணம் இரண்டும இன்றி, வேலைநிறுத்தம் நிச்சயம் என்ற நிலை பிறந்தது. அந்தக் கமிஷன் வழங்கியுள்ள இடைக்கால நிவாரணம் இந்த இலட்சணத்தில் இருக்கிறது.

ஊழியர்களின கஷ்டம கண்டு தாங்கள் கலங்குவதாக வெறுங் கண்ணைத் துடைத்துக் கொண்ட டெல்லிப் பெரியவர்கள் நியமித்த கமிஷன், வெறுங் கண்துடைப்புக் கமிஷனாகவே தன்னைக் காட்டிக் கொண்டு விட்டது, டெல்லி ஊழியர்களினமுன்!

மேலும், நான்கு மாதங்கள் தேவைப்பட்டிருக்கின்றன இந்தக் கமிஷனுக்கு, இந்தச் சிபாரிசைத் தர! இதிலிருந்து யூகித்துக் கொள்ளலாம்—குழு, பிரதான கோரிக்கைகளைக் கவனிக்க எத்தனை காலம் எடுத்துக் கொள்ளும் என்பதை!

ஊழியர்கள் மீண்டும் ஓர் முறை தங்கள் சக்தியைத் திரட்டிக் காட்டுவதை கமிஷன் விரும்பவில்லை; அது டெல்லிக்குப் பிடிக்காது என்றால், காலங்கடத்தாமல் ஊழியர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து முடிவு கூறவேண்டும்.

அத்துடன், 'மாநில சர்க்கார் ஊழியர்கள் அழுகிறபோது பார்த்துக்கொள்ளலாம்' என்றிராமல், டெல்லி—மாநில சர்க்கார்கள், இந்தக் கமிஷனிடமே அவர்களது கோரிக்கைகளைப் பரிசீலிககும் வேலையையும் விடலாம்.

புதிய காசு பற்றி

கேள்வியும்—பதிலும்

புதுடில்லி, டிச. 20—

"10, 5, 2, 1 ஆகிய புதிய காசு நாணயங்கள் போதுமான அளவு தயார் செய்யப்பட்ட பிறகும்—அணு, பைசா நாணயங்களைத் திரும்பப் பெறும் வேலை துவங்கியபிறகும் தான், 50, 25 ஆகிய புதிய நாணயங்கள் தயாரிக்கப்படும்"

என்று உதவி நிதி மந்திரி பி. ஆர். பகத், மக்கள்சபைக் கூட்டத்தில், கேள்விக்குப் பதிலளித்திருக்கிறார்.

"புதிய ஒரு பைசா நாணயம் மிகச் சிறியதாக இருப்பதால், அதனைப் பெரிதாக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?" என்று கேட்டபோது, 'அதுபோல எவரும் கேட்கவில்லை' என்று அவர் கூறினாராம்!

596 அந்நியர்கள்

டெல்லி சர்க்காரின் கீழ பணிபுரிகின்றனராம்!

டெல்லி சர்க்காரின்கீழ் பல இலாகாக்களிலுமாக சுமார் 596 அந்நிய நாட்டவர் பணிபுரிகின்றனர் என்றும், இவர்களில் 188 பேர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் என்றும், 69 பேர் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் என்றும், 42 அமெரிக்கரும், 22 ஜெர்மானியர்களும் பல இலாகாக்களிலுமாகப் பணிபுரிகின்றனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஒரு மாறுதல்!

1958 ஏப்ரல் திங்களுக்குப் பின்னர்தான் மத்திய விற்பனை வரி சட்டத்தின் 15-வது பிரிவை அமுலாக்குவது பற்றி ஆராயப்படுமாம்.

மாநில அரசாங்கத்திற்கு வாணிபத் துறையில் வரி விதிக்கும் உரிமையை இந்தப் பிரிவு கட்டுப்படுத்துகிறது.

பருத்தி, நூல், நிலக்கரி, தோல், இரும்பு, சணல், எண்ணெய் வித்துக்கள் இந்த பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

புதியதோர் செய்தி!

கல்கத்தா, டிச. 21—

"2,000 ஆண்டுகளுக்குமுன்பே இந்தியாவில் புள்ளிவிவரம் சேகரிக்கும் முறை இருந்துள்ளது" என்று பேராசிரியர் ஆல்டேன் தெரிவித்துள்ளார்.

"நவீன புள்ளி விவரப் படிப்பு, இந்தியாவுக்கு மேற்கு நாடுகளிலிருந்துதான் வந்தது என்று நினைப்பது தவறு" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வளமுள்ளதாக்க வழிவகுக்கின்றனர்!

புதுடில்லி, டிச. 21—

பீகாரைச் சேர்ந்த இராஜகிரியிலும், டில்லிக்கு அருகிலுள்ள சோகனாவிலும் இரசாயன சத்து கலந்த தண்ணீர் ஊற்றுகள் இருப்பதாகவும, இவற்றைப் பரிசீலனை செய்யவந்த ரஷ்ய நிபுணர்கள் இந்த இரண்டு இடங்களையும் சுகாதாரப் பகுதிகளாக ஆக்கிவிடலாமெனக் கருத்தறிவித்திருப்பதாகவும், மக்கள்சபையில் மத்திய சுகாதார அமைச்சர் கர்மார்கர் தெரிவித்துள்ளார்.

இராஜகிரி ஊற்றுத் தண்ணீரில் ரேடியோக கதிரியக்கம இருப்பதால் மருத்துவச் சிகிச்சைககு அது பயன்படுமென்றும், அங்கு ஒரு சுகாதார நகரம் நிறுவலாம் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனராம.

வீடு கட்டித் தரும் திட்டம்

'நிதி உதவியை அதிகரித்துத் தருக'

டெல்லி தேவனுக்கு சென்னை சர்க்கார் கோரிக்கை

புதுடில்லி, டிச. 19—

குறைந்த வருமானமுடையவர்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கித் தருமாறு மத்திய சர்க்காரை, சென்னை சர்க்கார் கேட்டிருக்கிறார்களாம்!

1957—58-ம் ஆண்டுக்கான ரூ. 22 30 இலட்சம் என்ற தொகைகள் ரூ. 59 04 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டும் என்ற சென்னையின் கோரிக்கை தங்களின் பரிசீலனையிலிருப்பதாக மத்திய உதவி மந்திரி அனில் கே. சந்தா மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

★

அதிகாரி நியமிக்கப்பட்டு வருகிறார்; சுகாதாரம், விடுமுறை குடியிருப்பு வசதி ஆகியவை போன்ற சொந்தக் குடும்ப சம்பந்தமான பிரச்சினைகளை இந்த அதிகாரி நேரடியாகக் கவனித்து வருவார்.

"மனிதர்களுக்கு, மனோரீதியாகவும், உணர்ச்சி சம்பந்தமாகவும் அனேக பிரச்னைகள் ஏற்படுகின்றன; அவைகளைச்சரியான நோத்தில் ஆராய்ந்து, நேரடியாகத் தீர்க்க முயன்றால், அவை சரியாகிவிடும்; வேலை செய்வதற்கு நல்ல சுமூகமான சூழ்நிலையும் ஏற்படும்; அவைகளை உத்தேசித்தே மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன"

என்று, இந்நியமனத்திற்கான காரணத்தை விளக்குகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குறைந்த வருமானமுடையோருக்கு வீடு கட்டும் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சர்க்கார் ஒதுக்கும் நிதி

சென்னை, டிச. 19—

குறைந்த வருமானமுடையோருக்கு வீடு கட்டித்தரும் திட்டப்படி, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 3,63,000 வரை சென்னை சர்க்கார் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது.

மாநிலம் முழுவதற்குமாக இந்தத் திட்டத்தின்கீழ் சர்க்கார் ரூ 42,17,000 வரை ஒதுக்கியுள்ளார்கள்.

★

உள்ளாட்சிமன்றங்கட்கு டேல்லி ஒதுக்கிய தோகை

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டத்தின்கீழ் சென்னை மாநிலத்திலுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு இந்திய சர்க்காரால் ரூ. 45,80,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் ரூ. 15 இலட்சத்தை நகரசபைக்கு சென்னை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இந்தியாவில் வேலையற்றோர்!

எண்ணிக்கை அதிகரிப்பு

புதுடில்லி, டிச. 20—

"அக்டோபர் மாதத்தில் 1,38,788 பேர்கள் பதிவு செய்துகொண்டார்கள்; முந்திய மாதத்தில் அந்த எண்ணிக்கை 1,60,681 ஆகும். அக்டோபர் மாத இறுதியில், இன்னும் வேலை கிடைக்காமல் பதிவுப புத்தகத்தில் பெயர் கண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 8,65,788 ஆக இருந்தது; இது, முந்திய மாத இறுதியில் இருந்த எண்ணிக்கையைவிட 4,217 அதிகமாகும்"

என்று, இந்திய சர்க்காரின் செய்தி அறிவிப்பு இலாகாமூலம் தகவல், தரப்பட்டிருக்கிறது.

வேலை தேடித்தரும் நிறுவனங்கள் அக்டோபர் மாதத்தில் 14,389 பேருக்கு வேலை தேடித் தந்திருக்கின்றனவென்றும் முந்திய மாதத்தில் இந்த எண்ணிக்கை 16,805 ஆகுமென்றும் தெரிவிக்கப்பட்டிருககிறது.

சர்க்கார் ஊழியர் வாழ்க்கை நலம்

அதிகாரி நியமனத்திற்குக் காரணம் என்ன?

புதுடில்லி, டிச. 20—

மத்திய சர்க்காரில் 16-இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கும், 2-வது, 3-வது, 4-வது வகுப்பு ஊழியர்களின் வாழ்க்கை நலத்தைக் கவனிப்பதற்காக இந்திய சர்க்காரைச் சேர்ந்த ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒரு உயர்தர

தொழில் துறைத் தகராறுகள்

10 மாநிலங்களிலிருந்து 8,026 புகார்களாம்!

புதுடில்லி, டிச. 20—

"செப்டம்பரில் புதிதாக 131 தொழில் துறைத் தகராறுகள் ஏற்பட்டன; அவைகளோடு சேர்த்து, நடப்புத் தகராறுகளின் மொத்த எண்ணிக்கை 26 கதவடைப்புகள் உட்பட—163 ஆகும்; புதிய தகராறுகளுக்கான முக்கியமான காரணங்களில் சம்பளங்கள், அலவன்சுகள், போனஸ், சிப்பந்திகள் பிரச்சினை அடங்கியுள்ளன"

என்று, இந்திய சர்க்கார் செய்தி இலாகாமூலம் தகவல் தரப்பட்டிருக்கிறது.

செப்டம்பர் மாதத்தில் 122 தகராறுகள் முடிவடைந்தன; அவைகளில் 84 தகராறுகள் ஒவ்வொன்றும் 5 நாட்களுக்குமேல் நீடித்திருக்கவில்லை; ஐந்து தகராறுகள் மட்டும் ஒன்வொன்றும் 30 நாட்களுக்கு மேல் நீடித்திருந்திருந்தன" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பத்து மாநிலங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி, அந்த மாநிலங்களின் தொழிலாளர் நல இலாகாக்களுக்கு மொத்தம் 8,026 புகார்கள் வந்தன என்றும், அவைகளில் 7 692 புகார்கள் பைசல் செய்யப்பட்டன அல்லது பரிசீலனை செய்யப்பட்டன என்றும் தெரிய வருகிறது.

ரஷ்ய இராணுவச் செலவில் 'வெட்டு'

விஞ்ஞான வளர்ச்சிக்கு அதிகத் தொகையாம்!

ரஷ்யாவின் 1958-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை சென்ற ஆண்டைவிட 40 கோடி ரூபிள் குறைவு என்று சோவியத் பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனல், விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை இந்த ஆண்டு அதிகப்படுத்தப்பட்டுள்ளது; 1,820 கோடி ரூபிள் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைத் தவிர, திட்டத்தில் காணப்படும் இலக்குகளில், இயல் கட்டண அளவுக்கு விமான கட்டணத்தைக் குறைக்கவும் விவசாய உற்பத்தியை 17 சதவிகிதம் அதிகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய வருமானத்தில் காணப்படும் 6 சதவிகித உயர்வை 8 சதவிகிதமாக உயர்த்தவும், புதிய அணு உலை, மின்சாரத் திட்டங்களை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆளும் நபர்கள் மாறினரே தவிர, ஆட்சிமுறை மாறவில்லை

நல்வாழ்வுக்கு உறுதிதந்தோர் ஆட்சியில் தொழிலாளர் கண்ட பலன் என்ன?

விழிப்புணர்வு பெற்றால்தான் வேதனையைக் களைந்தெறிய இயலும்

தொழிலாளர்களிடையே என். வி. நடராசன் முழக்கம்

சென்னை—பெரம்பூர் கான்ரான்ஸ்மித் நகரில் (திரு. வி. க. திடல்) 15—12—57-ல் நடைபெற்ற 'ஸ்டூடெண்ட்ஸ் பாக்குத் தூள் தொழிலாளர் சங்க' ஆண்டு விழாவில் கலந்துகொண்டு, தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"இங்கு பேசும்போது எனக்குப் பழைய சம்பவங்கள் நினைவிற்கு வருகின்றன. வெள்ளையர்கள் ஆட்சியின்போதும் பொதுவாகத் தொழிலாளர் தோழர்கள் சம்பள உயர்வு, பிற வசதி ஆகியவற்றிற்காகப் போராடினர். முதலாளிகளுடன் காலமெல்லாம் அறப்போரில் ஈடுபட்டு, பின்னர் சிலஉரிமைகளைப் பெற்று வந்தனர்.

"வெள்ளையர் ஆட்சி அகன்று சுதந்தர ஆட்சி பத்து ஆண்டுக் காலமாக நடைபெறுகிறது இன்றும் நீங்கள், சம்பள உயர்வுப் பிரச்சினை, போனஸ் பிரச்சினை என்பதாக ஒவ்வொன்றிலும் முன்போலவே முதலாளிகளிடம் போராடியும், அதுபோன்றே அரசியலாரின் அடக்குமுறைக்கு ஆளாகியும்தான் அந்தச் சாதாரண வசதியைப் பெற வேண்டியிருக்கிறது. அன்று காங்கிரஸ் தலைவர்கள், 'சுதந்தரம் கிடைத்ததும், தொழிலாளர்கள் சுயராஜ்யமும் சுக வாழ்வும் பெறுவர்' என்று உறுதியளித்தனர். அந்த உறுதிமொழியை நம்பிய தொழிலாளர் தோழர்களும், 'வெள்ளையரின் ஆதிக்கத்தை தகர்த்தெறிந்தால், தங்களின் வாழ்வு வளம் பெறும்' என்ற நம்பிக்கையில், அன்று அடக்குமுறைக்கு ஆளாயினர் எண்ணற்றோர்; ஆனால் இன்று தொழிலாளர்களும் நடுத்தர மக்களும் காணும் பலன் என்ன?

"எனவே, ஆளும் நபர்கள் தான் மாறினார்களேயன்றி ஆட்சி முறை மாறவில்லை என்பதுடன், பாட்டாளி மக்கள் தங்களின் சாதாரண உரிமைப் பிரச்சினையில் அரசியலாரின் சட்டங்களும், அடக்குமுறைகளும் குறுக்கிடுவதைக் கண்டு மனம் குமுறுகின்றனர்.

"அதுமட்டுமல்லாமல், ஆறு மாதங்களுக்கு முன் ஒரு தொழிலாளியின் தினசரி சம்பள விகிதம் ரூ. 1 என்றால், அதை ரூ 1—2—0 ஆகப் பெறுவதற்குப் பலவிதத் தொல்லைகளை அனுபவித்து, ஆறு மாதங்களுக்குப் பிறகு இன்று அந்த சம்பள உயர்வைப் பெறும்போது அன்றிருந்த விலைவாசிகளையும் இன்று அதே பொருள்களின் விலையேற்றத்தையும் ஒப்பிடும்போது, ஒரு தொழிலாளி ஆறு மாதத்திற்கு முன்பிருந்த தினசரி சம்பளத்தில் இரண்டணா உயர்த்திப் பெறுவதற்காக பட்ட தொல்லைகளும் பிற அனைத்தும் அந்தக் கூலி உயர்வை வெறும் பதினைந்தணா மதிப்பாகத்தானாக்குகிறது.

"உதாரணமாக, ஆறு மாதங்களுக்கு முன்பிருந்த இரயில்வே கட்டணம், தபால் கட்டணம், தீப்பெட்டி, எண்ணெய் வகைகள், புகையிலை முதலிய அனைத்துக்கும் இன்று விலை உயர்ந்துவிட்டது. இதை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்பொழுது நீங்கள் பெறும் சம்பள உயர்வு என்பது, 'சாண் ஏறினால் முழம் சறுக்கும்' என்ற கதைபோலத்தான் ஆகிறது! அந்த நிலையில் ஆட்சி முறையின் இலட்சணம் இருக்கிறது.

"எனவே, இன்றுள்ள ஆட்சிமுறை அடியோடு மாறினாலொழிய, தொழிலாளர் பிரச்சினை என்பது இரண்டுங்கெட்டான் நிலையில்தான் இருந்து வரும்.

"எனவே, பொதுவாக பல துறை தொழிலாளர்களும், தங்களின் சம்பள உயர்வும், பிற வசதிகளும் பெறுவது என்பதை எவ்வளவு முக்கியமாகக் கருதுகிறார்களோ, அதைவிட முக்கியமாக இன்றைய ஆட்சி முறை மாற வேண்டும் என்பதை உணர்வதிலும், அதைச் செயல்படுத்துவதிலும் கண்ணுங்கருத்துமாயிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"இன்றுள்ள ஆட்சி, நடைமுறையில் முதலாளிகளுக்கு உறுதுணையாய் இருப்பதையே கடமையாக வாயளவில் தேனொழுகவும் பேசி, உழைப்பாளர்களை ஏய்த்துவருகிறது. தொழில் கோர்ட்டுகளின் தீர்ப்புகளுக்கு எத்தனை முதலாளிகள் மதித்து நடந்தனர் என்று கேட்கிறோம். அவ்விதம் மதித்து நடக்காதவர்களை இந்த ஆட்சியினர் என்ன செய்துவிட்டனர்? ஆனால் தொழில் கோர்ட் தீர்ப்புக்கு சற்று மாறாக நடக்கும் தொழிலாளர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பதில் தனது தீவிரத்தன்மையைக் காட்டுவதில் அரசியலார் தவறவில்லை.

"இதற்குக் காரணம் என்ன? பெரும் தொழிலதிபர்களின் பண உதவியாலேயே காங்கிரஸ் உயிர் வாழ்ந்துவருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, தேர்தல் சமயத்தில், வட நாட்டின் பெரிய தொழில் நிலைய அதிபர் ஒருவரும் தென்னாட்டில் அதுபோலவே ஒரு தொழில் நிலைய அதிபரும் இலட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்தனர் என்பதற்காக பங்குதாரர்களில் ஒருவர் வழக்கு தொடுத்திருப்பதே போதுமானதாகும் என்று கருதுகிறோம்.

"எனவே, இன்றைய ஆட்சி முறை முதலாளித்துவத்திற்கு பக்கத் துணையாகவும், உழைப்பாளர்களுக்கு வேதனையைத் தரக் கூடியதாகவும் இருந்துவருகிறது என்பதை நேர்மை உள்ளம் படைத்த அனைவருமே உணருவர்

"எனவே, தொழிலாளர் தோழர்கள் எந்தச் சங்கத்தில் சேர்ந்திருப்பினும், தொழிற்சங்க விவகாரங்களைப் பொறுத்தவரை அரசியல் நோக்கங்களைப் புகுத்தாமல், பொதுவாக அரசியல் துறையில் நிகழும் முக்கிய சம்பவங்களில் கடந்த பத்து ஆண்டுக் காலமாக நடைபெற்றுவரும் ஆட்சியால் விளைந்துள்ள கேடுகளை அறவே அகற்றும் வகையில் விழிப்புணர்ச்சி அடைந்தால்தான் எதிர்காலத்திலாகிலும் பல்வேறு துறையிலுமுள்ள தொழிலாளர்கள் நல்வாழ்வு பெற முடியும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"ஸ்டூடெண்ட்ஸ் பாக்குத்தூள் தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில் அதன் அதிபர், சட்டப் பிரச்சினைகளையும், பிறவற்றையும் ஆராய்வதை மட்டுமே பெரிதாகக் கருதாமல், காலத்தின் மாறுதலை அறிந்து நல்ல உள்ளத்துடன் அத்தொழிலாளர்களுக்கு வசதிகளை அளித்துவரவேண்டுமென்று இவ்வாண்டு விழாக் கூட்டத்தில் மனமார விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

"வட நாட்டில் தொழில் வளம் பெருகுகிறது; வேலையில்லாத் திண்டாட்டமும் மிகக் குறைந்துவருகிறது; வாழ்க்கைத்தரமும் உயர்ந்து வருகிறது.

"ஆனால் தென்னகத்தில் இருக்கும் தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன; வேலையில்லாத் திண்டாட்டமும் தலைவிரித்தாடுகிறது; வாழ்க்கை சுகந்தரமோ திடுக்கிடக்கூடியதாயிருக்கிறது.

"இந்த இழிநிலை ஏன்—தொழிலாளர் தோழர்களே சிந்தியுங்கள்! இதனை அகற்ற வழியென்ன—ஆழ்ந்து சிந்தியுங்கள்! அதன்வழி நின்று நம் தாயகத்தின் தலைநிமிர்ந்த வாழ்வுக்கான பணியிலும் அக்கறை செலுத்தவேண்டுகிறேன்."

மேலும் அவர் பேசுகையில், தொழிற்சங்கத் துறையில் தி. மு. கழகம் கொண்டுள்ள கருத்துக்களையும், மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் விவரித்தார்.

கூட்டத்திற்கு தொழிற்சங்கத் தலைவர் லஜபதி அவர்கள் தலைமை தாங்கினார்; தோழியர் விஜயலட்சுமி (பி.சோ.), தோழர்கள் ஜி. உமாபதி (தமிழரசுக் கழகம்), நாராயணன் (சோஷலிஸ்டு) ஆகியோர் பேசினர்.

சென்னை - இராயபுரம் சிங்காரவேலர் மன்றப் பொதுக்கூட்டம்

சி. பி. சிற்றரசு, என். சீவரத்தினம் கலந்துகொண்டனர்

5—12—57 மாலை 6-30 மணியளவில் இராயபுரம் பனைமரத் தொட்டி அம்மன் கோவில் திடலில், சிந்தனைசிற்பி சிங்காரவேலர் மன்றத்தின் சார்பில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் சச்சிதானந்தம் தலைமை வகித்தார். தோழர்கள் அன்புரோசு, என். சீவரத்தினம் ஆகியோர் பேசியபின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுகையில், தி. மு. கழகக் கொள்கைகளையும், இலட்சியங்களையும் விளக்கினார். கழகம் சட்ட மன்றத்தில் ஆற்றிவரும் பெரும் பணியினை எடுத்துக் கூறினார்.

இரவு 9.30 மணியளவில், மன்றச் செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

புதுப்பேட்டையில் மஜீத் மன்றம்

பொதுச்செயலாளர் துவக்கி வைத்தார்

அன்பழகன், ஆர். எஸ். பாண்டியன் கலந்துகொண்டனர்

சென்னை — எழும்பூரையொட்டிய புதுப்பேட்டையில் 16-12-57 மாலை மஜீத் நினைவு மன்றத் துவக்கவிழா சிறப்புற நடைபெற்றது.

விழாவுக்கு தோழர் இளஞ்சேரலாதன் தலைமை வகித்தார். சேலம்-சீனிவாசன் இன்னிசைக் குழுவின் பொதுக்கூட்டம் துவங்கியது.

துவக்கத்தில் தோழர் எம்.எஸ். அப்துல்காதர் பேசுகையில், 10 ஆண்டு சுதந்தர ஆட்சியில் காங்கிரசார் மக்களுக்குச் சாதித்ததென்ன என்று கேள்வியெழுப்பி காங்கிரஸ் ஆட்சியிலே மக்கள் படும் அவதியையும், வடநாடு தென்னாட்டை வஞ்சிப்பதையும் எடுத்துக்கூறி, இதுதான் சமதர்மக் குடியரசா என வினவினார்.

அடுத்து தோழர் கருமுகில் சிறிது நேரம் பேசினார்.

பின்னர் தோழர் ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில், இந்தி தமிழ் நாட்டில் திணிக்கப்பட மாட்டாது என்று உறுதிமொழிகளைத் தந்தவண்ணமிருக்கும் டெல்லிப் பெரியவர்கள், ஒரு பக்கத்தில் இந்தியைத் திணிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருப்பதை எடுத்துக்காட்டினார். அரசியல் சட்டத்தில் 1965 வரை ஆங்கிலம் தொடர்ந்து அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்று விதி இருந்தும், அந்த விதியை மீறும் வகையில் இந்தி இப்பொழுதே திணிக்கப்பட்டுவிட்டது என்றும், காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமன் நாராயணனே இந்தி திணிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார் என்பதையும் விளக்கினார்.

அடுத்து, பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், காமராசர் ஆட்சியால் தமிழ் நாட்டு மக்களுக்கு எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், தமிழ் நாட்டு மந்திரிகளெல்லாம், டெல்லி சர்க்காருக்கு 'டவாலி' சேவகம் புரிவதைப்போன்ற நிலையில்தானிருக்கிறார் என்பதையும், தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு டெல்லி ஏகாதிபத்தியம் தடையாகவுள்ளதையும் எடுத்துக்கூறி, தி. மு. கழகத்தின் இலட்சியங்கள் நிறைவேறினால்தான் இந்த நாடு எல்லா வளங்களும் பெற்று மக்கள் நல்வாழ்வு பெறமுடியும் என்று கூறினார்.

இறுதியாக, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

"எதற்கெடுத்தாலும் டெல்லியிடம் கெஞ்சி நமது உரிமைகளைப் பெறவேண்டியுள்ளது. இந்த நிலையை மாற்றுவதுதான் தி. மு. கழகத்தின் குறிக்கோள். இங்குள்ள இயற்கை வளம், அறிவு, ஆற்றல், வரி, எல்லாம் இந்த நாட்டுக்கே பயன்படவேண்டும். அகில இந்திய தேசியம் என்பதெல்லாம் இந்த நாடு வாழப் பயன்படவில்லை.

"இங்கு ஒரு மாங்காய் ஊறுகாய்த் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றாலும் டெல்லியிடம் 'லைசென்சு' பெற காவடி எடுக்கவேண்டிய நிலைமையிலே நாம் இன்று இருக்கிறோம்; இங்கு ஒரு சர்க்கரை ஆலை வைக்க வேண்டுமென்றால் அதற்கு திட்டம் தீட்டுமிடம் டெல்லியாக இருக்கிறது. இந்த இழிநிலையில் நாம் இருப்பதைவிட, வடநாட்டுத் தொடர்பை தென்னாடு அறுத்துக் கொண்டு, தமிழ்—தெலுங்கு—மலையாள—கன்னட மக்கள் மொழிவழி பிரிந்து இனவழி சேர்ந்து திராவிட சமதர்மக் குடியரசாக மலருமேயானால், நாம் பொருளாதாரத் துறையில் மற்றவர்களைவிட மிக விரைவில் முன்னேற்ற முடியும்.

வடநாட்டாரோடு இணைந்திருப்பதனால் இன்னின்ன வகையிலே நமக்கு இலாபம் என்று காட்ட முடியுமா?

"நாட்டுப் பிரிவினை கூடாது—எல்லோரும் ஒன்று என்கிறார்கள். எல்லோரும் ஒன்றாக இருந்தால் நல்லதுதான்; ஆனால் முடியவில்லையே! வெண்டல் வில்கி சொன்னதுபோல், 'ஒரே உலகம்' என்பது கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது; எப்படி ஒரே உலகமாக இருக்க முடியும்?

"அப்படியானால், இந்தியாவும் ஏன் தனியாக இருக்க வேண்டும்? இந்த உலக நாடுகள் அத்தனையோடும் சேர்ந்து இந்தியா இருக்கக்கூடாதா? அப்படியில்லாவிட்டாலும் ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளத்தனையும் சேர்ந்தாவது ஓராட்சியின்கீழ் இருந்தால்—அதற்கு ஆசிய ஜோதி நேருவே பிரதமராக இருந்தால் ஆகாதா? இருந்தால் நல்லதுதான்; முடியவில்லையே!

"அதைப் போலத்தான், திராவிடம் வடநாட்டோடு சேர்ந்திருக்கக் கூடாது என்பதல்ல; சேர்ந்திருக்க முடியவில்லை. முடியாத காரணத்தால்தான் நாம், தனியாட்சி கோருகிறோம்.

"இந்தியா முழுவதும் ஒரே தேசியம் என்பதெல்லாம்

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டக் கல்லூரி மாணவர்கட்கு விடுதி

நிதி அமைச்சரிடம் வற்புறுத்தல்

சென்னை, டிச. 20—

தற்போது சென்னை சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு விடுதி இல்லாதது பெரிய குறையாக உள்ளது என்று சென்னை கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களிடம் சட்டக் கல்லூரி மாணவர் சார்பாக திரு. மருதாசலம், செல்வராசு, பெரியசாமி ஆகியோர் எடுத்துரைத்தனர்.

சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குக் கட்டப்படும் விடுதி வேலை முடிந்தவுடன், இப்போதுள்ள மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்பாடு செய்ய அமைச்சர் சுப்பிரமணியம் உறுதியளித்துள்ளார் என்று தெரியவருகிறது.

சென்னை - பெரியமெட்டு தி. மு. க. பொதுக்கூட்டம்

இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன்

கலந்துகொண்டனர்

சென்னை 26-வதுவட்ட (பெரியமெட்டு) தி. மு. கழகக் கிளையின் சார்பில், 14—12—57 மாலை பெரியமெட்டு பாரக்ஸ் சாலையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சேலம்-சீனிவாசன் இன்னிசைக்குப் பிறகு தோழர் ஆ. வெ. பழனிச்சாமி தலைமையில் கூட்டம் துவங்கியது.

தோழர்கள் நல்லதம்பி, நல்லமுத்து, ஆ. குப்புசாமி ஆகியோர் சிறிதுநேரம் பேசினர்.

அடுத்து தோழர் க. அன்பழகன் எம. எல். ஏ. அவர்கள் காமராசர் ஆட்சியில் பெரியாருக்கு சிறைத் தண்டனை கிடைத்திருப்பது குறித்தும், தமிழர்களை பண்டித நேரு மட்டரகமாகத் தாக்கியது குறித்தும், சட்டசபை நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தும் விளக்கமாகப் பேசினார்.

இறுதியாகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பண்டித நேருவின் கூற்றுக்குத் தக்கவிதத்திலே பதில் தந்தும், திராவிடம் பிரியவேண்டிய அவசியம் குறித்தும், இந்தியை நாம் எதிர்க்கவேண்டிய இன்றியமையாமை குறித்தும் நீண்ட நேரம் அழகுற எடுத்துக்கூறி விளக்கினார்கள்.

கூட்டத்தில், 26-வது வட்டத்தைச் சேர்ந்த தோழர் அய்யாவு அவர்களின் பெண் குழந்தைக்கு பொதுச்செயலாளரால் 'பூங்கொடி' எனப் பெயரிடப்பட்டது.

பொதுச்செயலாளருக்கும், க. அன்பழகன் அவர்களுக்கும், சர் தியாகராயர் மன்றம், கே. வி. கே. சாமி மன்றம், வ. உ. சி. மன்றம் ஆகியவை சார்பில் கைத்தறி ஆடைகளும், செல்லை பத்மநாபன் சார்பில் மலர்மாலையும் அணிவிக்கப்பட்டன.

கெஞ்சினர்-கூத்தாடினர்-மிஞ்சியது ஏமாற்றமே!

கருணை பொழிய டெல்லி 'தேவர்'கள் மறுப்பு!

தமிழ் மாநில அரசாங்கத்திற்கு மீண்டும் மூக்கறுப்பு!

திட்டங்களில் மேலும் 'வெட்டு'

புதுடில்லி, டிச. 21—

எதிர்பார்த்தபடி, சென்னை சர்க்காருக்கு தோல்வியும், ஏமாற்றமும்தான் கிடைத்திருக்கின்றன. 1958—59-ம் ஆண்டுக்கான திட்டம் ரூ 35·82 கோடி மதிப்புடையதாயிருக்க வேண்டுமெனவும், ரெவினியூ வகைச் செலவைத் தாங்கள் சரிக்கட்டிக்கொள்வதாகவும், முதலீட்டு வகைச் செலவுக்கு மட்டும் மத்திய சர்க்கார் உதவ வேண்டுமெனவும் சென்னை மந்திரிகள் டெல்லிப் பெரியவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடினர்; ஆனல் அவர்களோ, 'திட்டத்தின் மதிப்பு ரூ. 30 கோடிக்கு அதிகமாக இருக்கவே கூடாது' என்று கூறிவிட்டதாகத் தெரியவருகிறது. அனுமதிப்பது எவ்வளவு என்பது பின்னரே தெரியவருமாம்.

நிதி மந்திரி சுப்பிரமணியம், தனது திட்டம் வெட்டப்படக் கூடாது என்பதற்காக மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டாராம்; போராடினாராம்; ஆனல், திட்டக் குழுவோ, விவசாய சம்பந்தமானவை தவிர இதர திட்டங்கள் அனைத்தையும் வெட்டிவிட்டனராம்!

இது குறித்து, மீண்டும் சென்னை சர்க்கார், திட்டக் குழுவினரிடமும், மத்திய சர்க்காரிடமும் முறையிட உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்ட அழைப்பு

25—12—57 மாலை 5-30 மணிக்கு எண் 53, புதிய கலாஸிபாளையம் விரிவில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் ஆய்வுக்குவரும்:—

1. பெங்களூர் மாவட்ட இரண்டாவது மாநாடு நடத்துவதற்கான இடம், தேதி, வரவேற்புக்குழு, திறப்பாளர், தலைவர் நிர்ணயித்தல்;
2. மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மன்றங்களுக்கும், படிப்பகங்களுக்கும் மாவட்டத்தில் பிரதிநிதித்துவம் கொடுத்தல்;
3. நகராண்மைக் கழகத் தேர்தல் பிரச்சினைகள்;
4. மாவட்டத்தின் வரவு-செலவுக் கணக்கு.

"எல்லாக் கிளைக் கழகச் செயலாளர்களும் மாவட்டப் பிரதிநிதிகளும் தவறாது வருகை தரவேண்டுமாய்க் கோருகிறேன்"

என்று, பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். வி பதி கேட்டுக்கொள்கிறார்.

முதலில் அரசியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வளருவதற்குள் — அதாவது, 351-வது விதியின் கட்டளையை நிறைவேற்றுவதற்குமுன், இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கு எப்படி முயற்சிக்கலாம்? இந்த 351-வது விதியின் நோக்கம் ஈடேறியபிறகு, அதைப் பற்றி சாவதானமாக, விருப்பு வெறுப்பின்றி சிந்திக்கலாம். அதற்கிடையில், எப்படி இந்தியை ஆட்சிமொழியாக்க முயற்சிக்கலாம்?

"கூட்டுக் கலாச்சாரம் என்றால் என்ன?

"திராவிடக் கலாச்சாரம், வடநாட்டுக் கலாச்சாரம், அசாமி—பஞ்சாபி கலாச்சாரம் இவற்றை எல்லாம் சேர்ந்தது என்பதுதானே கூட்டுக் கலாச்சாரம் என்பதற்குப் பொருள்?

"எனவே, முதலில், இந்த பல்வேறு கலாச்சாரங்களின் அத்தியாவசியமான — வெளிப்படையான அம்சங்களை ஒன்று சேர்க்கவேண்டும்; அதன்பிறகு அதனை வளப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

"இதைச் செய்வதற்கு முன்னல் இந்தியை ஆட்சிமொழியாக்குவது எவ்வகையில் நியாயமாகும்?"

என்று டாக்டர் சி.பி. இராமசாமி அவர்கள், தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

(மாநாட்டிலும், கூட்டத்திலும் கலந்துகொண்டவர்களின் உரைச் சுருக்கம் பின்னர் வெளிவரும்)

தென் மண்டலக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

டிசம்பர் இறுதியில் திருவனந்தபுரத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட தென் மண்டலக் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சனவரியிலோ, பிப்ரவரியிலோ அதற்குப் பின்னரோதான் அக் கூட்டம் நடைபெறுமாம்!

ஏ.கோவிந்தசாமி--டி.டி.கே. சந்திப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

றன என்றும், அதனல் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் எடுத்துக்கூறி, மீண்டும் கழிவுத் தொகையை ஏற்கனவே இருந்த அளவுக்கு உயர்த்திக் கொடுகக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் டி. டி. கே. அவர்களும் விவரங்களை பொறுமையுடன் கேட்டறிந்தார்.

பொங்கல், தீபாவளி ஆகிய பண்டிகைக் காலங்களிலும், கைத்தறி வாரம் கொண்டாடப்படும் காலங்களிலும் மேற்படி கழிவுத் தொகையை அவசியம் உயர்த்துவதாக அமைச்சர் உறுதி கூறினர்.

வருகிற பொங்கல் விழாவுக்கு முன்பே இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் அமைச்சர் உறுதி கூறியுள்ளார். (ந. கி.)

கழகக் கூட்டங்கள்

★

சென்னை-11வது வட்டம்:
லிங்கிச் செட்டித் தெருவில்
(மண்ணடி மல்லீஸ்வரன்கோவில் அருகில்)
தி மு. க கிளை 9வது ஆண்டு விழா
24—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. செழியன்
பேசுவோர்:
ஏ.வி.பி.ஆசைத்தம்பிஎம்.எல்.ஏ.
து. தமிழ்ச்செல்வன்
என். இராமதாஸ்
தே. அன்பரசு
இன்னிசை: சேலம்-சீனிவாசன்

★

எருமாம்பட்டி:
என். எஸ். கே. திடலில்
24—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஈ. கே. வேங்கன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஈ. ஆர். கிருஷ்ணன்
இரா. முத்து

★

குமாரபாளையம்:
சந்தைப்பேட்டை திடலில்
26—12—57 மாலை 5½ மணிக்கு
பேசுபவர்:
என். வி. நடராசன்

★

ஆத்தூர்:
சந்தைத் திடலில்
25—12—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: ஜி. கந்தசாமி
பேசுவோர்:
அருண்மொழி
ஏ. கே. வில்வம்
எம். பி. சுப்பிரமணியம் எம்.எல் ஏ.
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.

புதுப்பேட்டையில்.......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமற்ற கூற்று. தென்னாட்டுப் பழக்கவழக்க, நாகரிகங்கள், உணவு, உடை அத்தனையும் வடநாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. இந்தியா ஒரு நாடல்ல; ஒரு துணைக்கண்டம் இந்தியாவில் பல தேசிய இனங்கள் இருக்கின்றன.

"எந்த ஒரு இனத்துக்கும் ஒரே தேசியம்தான் இருக்கமுடியும்; இரண்டு தேசியங்கள் இருக்க முடியாது. ஒருவனுக்கு எப்படி இரண்டு தாய் இருக்கமுடியாதோ, அதேபோல், திராவிட மக்களுக்கு ஒரு தேசியம்தான் இருக்கமுடியும். அதுதான் திராவிட தேசியம்."

பொதுச்செயலாளர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இந்தித் திணிப்பைப்பற்றிக் குறிப்பிட்டு இந்தி என்பதில் 11 வகை இந்திகள் இருக்கின்றன என்றும், இப்போது புகுத்தப்படும் இந்திக்கு 'காரிபோலி' என்று பெயர் என்றும், இந்த இந்தியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை சுமார் 3½ கோடிதான் என்றும், இந்தியாவில் பெரும்பாலான மக்கள் இந்தி பேசுகிறார்கள் என்பது சரியல்ல என்றும் கூறி விளக்கினர்.

பொதுச்செயலாளர் பேசி முடித்தபின் நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

பொதுச்செயலாளருக்கும், பேராசிரியருக்கும் மஜீத் மன்றம் எழும்பூர் கண் வைத்தியசாலை தொழிலாளர்கள், மறுமலர்ச்சி மன்றம் ஆகியவை சார்பில் கைத்தறியாடைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான ரூ 12--1--6-ம் சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக நெடுஞ்செழியன் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

சென்னையில் குழந்தைகள் திருத்த 'கிளினிக்'

சென்னை, டிச. 21—

சென்னை நகரில் உள்ள பெரிய மருத்துவ விடுதியிலும், ஸ்டான்லி மருத்துவ விடுதியிலும் குழந்தைகள் திருத்த 'கிளினிக்'குகள் ஏற்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

திராவிடர் நாட்குறிப்பு--1958

தி. மு. கழக உறுப்பினர் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய பொன்னேடு

தி. மு. கழக முழுவிவரம், 1 500 கிளைகளின் விளக்கம், பேச்சாளர் முகவரிகள், அண்ணாவின் 365 பொன்மொழிகள், வருமான வரி முதலிய விவரங்கள் அடங்கியது.

★

விலை ரூ. 1-12 காசு.

கழிவு 20 சதவிகிதம். செலவு தனி. ஒரு நாட்குறிப்பு வேண்டுவோர் ரூ. 1-75 அனுப்புக.

பொங்கல் வாழ்த்துக்கள்:
50 ரகம் உள்ளன. மாதிரி செட் கவருடன் ரூ. 3—50

காலண்டர்: எம் ஜி ஆர்., கே. ஆர். ஆர், எஸ் எஸ். இராசேந்திரன், டி. வி நாராயணசாமி, என். எஸ் கிருஷ்ணன், சிவாஜி கணேசன் படங்கள் தாளுக்கு ஒன்று வீதம் 6 தாள் காலண்டர் 1-க்கு ரூ 0—50.

நடிகைகள் 6 பேர் கொண்ட 6 தாள் காலண்டர் 1-க்கு 0—50.

தி. மு. க. தலைவர்கள் 15 பேர்களின் உருவங்கள் அமைந்த மூவர்ணப் படம் 20×15 அளவில் உள்ளது விலை ரூ. 0—37.

ஷை காலண்டர் 1-க்கு ரூ. 0—50. கழிவு 25 சதவிகிதம்.

போர்வாள் 128, பிராட்வே, சென்னை-1.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக மாநாடு

தொண்டர்கள் கவனிக்க:

டிச. 27, 28-ம் தேதிகளில் நாகர்கோவிலில் நடைபெறவிருக்கும் நாஞ்சில் மாவட்ட தி. மு. க. 2-வது மாநாட்டின் தொண்டர் படைத் தலைவர்கள் எஸ். வி அப்பன். ஜி எம். ஷா ஆகியோர் தெரிவிப்பதாவது:—

"மாநாட்டில் தொண்டர்களாகப் பணியாற்ற பெயர்ப் பதிவு செய்திருக்கும் கன்னியாகுமரி மாவட்ட தோழர்கள் மட்டும் 26—12—57 காலை 8 மணிக்கு மாநாட்டுப் பந்தலில் வந்து சேரும்படி கேட்டுக்கொள்கிறோம்."

ஏசுநாதர் பிறந்த நாள் விழா

25—12—57 மாலை 6 மணிக்கு சென்னை—போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, 8 எண்ணுள்ள கிருத்துவப் பொதுநல ஊழியர் சங்கத்தில் பேராசிரியர் ஜோசப் பாண்டியராஜ் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெறும். புலவர் நன்னன், பா. செ. லிங்கம், ஜி. இராசமன்னர், கிருஸ்துதாஸ், மரகதவல்லி ஆகியோர் பேசுவர். அன்று பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு உணவளிக்கப்படும்; மாலை 8 மணிக்கு நாட்டியமும், இன்னிசை நிகழ்ச்சிகளும் உண்டு.

சர்க்கரைத் தொழிலுக்கு ஊதிய நிறுவனம்

சர்க்கரைத் தொழிலுக்கு ஊதிய நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது; இதில் 7 பேர் அங்கம் வகிக்கின்றனர். திரு. பிரசாத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராசவேலு மறைவு

காஞ்சீபுரம், டிச 23—

கன்னன் பஸ் சர்வீஸ், லாரி சர்வீஸ் உரிமையாளரும், காஞ்சீபுரம் நகராட்சி மன்ற உறுப்பினருமான பாபு அவர்களின் தந்தையார் இராசவேலு (முதலியார்) அவர்கள் தமது 67-ம் வயதில் [illegible] செல்வித் தெருவிலுள்ள தமது இல்லத்தில் இன்று காலை 5 மணிக்கு உயிர் நீத்தார். [illegible] பெரியார் [illegible] ராசன் என்ற இரண்டு புதல்வர்களும் ஒரு மணமான பெண்ணும் உள்ளனர்.

தந்தையைப் பிரிந்துவாடும் நண்பர்களுக்கும், குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ—ர்)

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

மாதம் ரூ. 100 முதல் ரூ. 300 வரை சம்பாதிக்கலாம்

எங்கள் ஸ்தாபனத்தில், தமிழில், தபால் மூலம் குறைந்த செலவில் ஹோமியோபதி படித்து டாக்டர் ஆகுங்கள்.

ஏழைகளுக்குக் கட்டண சலுகை உண்டு.

விபரங்களுக்கு எழுதுங்கள்:—
பாண்டியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,
21, வெள்ளியம்பலம் தெரு, மதுரை.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பொங்கல் வாழ்த்து!

புத்தம் புதியமுறை! கழக ஏடுகளின் விற்பனையாளருக்குத் தக்க சலுகை உண்டு! விபரங்களுக்கு: கே சிவப்பிரகாசம், சின்னப்பள்ளிவாசல் தெரு, விசயபுரம், திருவாரூர்.

பெங்களூர்—சிவாஜி நகர் தி மு.க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

25—12—57 காலை 9 மணிக்கு பெங்களூர்—சிவாஜி நகர் தி. மு. கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். அவ்வமயம் பொங்கல் விழா நடத்துவது மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

அரியலூர் முத்தமிழ் மன்ற உறுப்பினர்களுக்கு:

24—12—57 இரவு 9 மணியளவில் மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் மன்றப் பணிமனையில் நடைபெறும். அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். திராவிடர் திருநாள் கொண்டாடுவது பற்றி முடிவு செய்யப்படும்.

என். எஸ். இளங்கோ

சுற்றுப்பயணம்

டிச. 24: குலையன்கரிசல்
25: தூத்துக்குடி பொதுக் கூட்டம்
27, 28, 29: நாஞ்சில் மாவட்ட மாநாடு
ஜன. 4: பாபுராஜபுரம்
5: ஓமலூர்

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் கழகம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.